**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 22/2015** **நாள் 09.02.2026.**

**வாசா.1, திரு.குருசாமி**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 14ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் தாவா கோவிலில் கடந்த 2 ஆண்டு காலமாக அறங்காவல் தலைவராக உள்ளேன். இந்த வழக்கை நான் நடத்துவதற்காக வேண்டி நான் அறங்காவல் குழு தலைவராக வந்த பின்பு எனக்கு பழையஅறங்காவல் குழுவினாரால் அனுமதி ஏதும் வழங்கபட்டுள்ளதா என்று கேட்டால் வழங்கப்பட்டுள்ளது. எனக்கு அவ்வாறு அனுமதி கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில்தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். நான் பிராதில் தாக்கல் செய்துள்ள வரைபடமானது முற்றிலும் தவறானது என்று சொன்னால் அதுசரியல்ல. 22.07.1928ம் ஆண்டு இராஜபாளையம் யூனியன் போர்டில் வனிகவைசியர் செட்டியார் சமூக முன்னோர்கள் தபசில் சொத்து கல்செக்கு வைத்து நடத்துவதற்கு யார் பெயரில் உரிமம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் யார் பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்று தற்போது என்னால் சொல்லமுடியவில்லை அதற்கான ஆவணத்தை கொடுத்துள்ளேன். பிராது 1, 2 தபசில் சொத்துக்கள் எங்கள் கோவிலுக்கு சொந்தமானது என்பதை காண்பிக்ககூடிய பத்திர ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். பிராது 1, 2 தபசில் சொத்துக்கள் எங்கள் கோவிலுக்கு சொந்தமானது என்பதை காட்டுவதற்கான எந்தவிதமான உரிமை ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பிராது தபசில் சொத்துக்களில் நாங்கள் கல்செக்கு வைத்து ஆட்டி எண்ணையை உற்பத்தி செய்து வியாபாரம் செய்து அதன் மூலமாக வந்த வருமானத்தை கொண்டு கோவிலை நிர்வாகம் செய்து வந்தார்கள் என்று நான் சொல்லும் போது அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இந்த இடத்திற்கு காலிமனைக்கு நகராட்சியில் இருந்து ரசீது போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த தாவா சொத்தில் நாங்கள் கட்டிடம் கட்டியுள்ளோம் என்பதற்கு நகராட்சியில் இருந்து கட்டிட வரைபட அனுமதியை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டால் ஜெராக்ஸ் ஆவணத்தை கொடுத்துள்ளேன். வழக்கில் உள்ள 11, 12, 13 எதிர்வாதிகள் எங்களுடைய சமூகத்தை சார்ந்தவர்கள். அவர்களை எதற்காக இவ்வழக்கில் எதிர்வாதிகளாக சேர்த்துள்ளோம் என்று கேட்டால் ஆரம்பத்தில் அவர்கள் எங்கள் கோவில் நிர்வாகத்திற்கு எதிராக இருந்தார்கள் தற்போது எதிராக இல்லை. 11 முதல் 13 எதிர்வாதிகளுக்கு எதிராக நாங்கள் இந்த வழக்கில் எந்த விதமான பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். எதிர்வாதிகள் பிராது சொத்தில் குழாயை பதித்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நான் சொல்லும் போது அது எந்த ஆண்டு என்று கேட்டால் 2017, 2018 ம் ஆண்டு ஆகும். 2 வது தபசில் சொத்து இராஜபாளையம் பேரூராட்சியாக இருந்த சமயமான 1927ம் வருடத்திலேயே சர்வே செய்யப்பட்டு வழக்கிடை 2 வதுதபசில் சொத்து செட்டில்மெண்ட் சர்வே நம்பர் 261 என்று சர்வேயில்

தெருவாகவே சர்வே ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு இல்லை நான் தற்போது வரை வரி செலுத்தி வருகிறேன். கடந்த 1971ம் வருடம் ஆரம்ப நகர நில அளவையும் ரீ சர்வே செய்யப்பட்ட 1994ம் வருடத்திலும் 2 வதுதபசில் சொத்து சர்க்கார் புறம்போக்கு பத்திரகாளியம்மன் பொட்டல் தெரு உள்ளபடி பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் என்க்கு தெரியுமா என்றால் அது தவறு அது காலியிடம் என்றே உள்ளது.2 வது தபசில் சொத்தில் வடக்கிலும், கிழக்கிலும் எத்தனை குடியிருப்புகள் இருக்கும் என்றால் இருபுறமும் சேர்ந்து சுமார் 20 குடியிருப்புகள் இருக்கும். மேற்படி 20 குடியிருப்புகளில் வசிக்கும் பொதுமக்கள் 2 வது தபசில் சொத்தை பார்த்து தங்கள் வீடுகளுக்கு வாசல் வைத்து 2 வது தபசில் சொத்தை தங்ள்ள வீட்டிற்கு செல்லும் பொதுத்தெருவாக பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொ'னனால் அது தவறு நடைபாதை தனியாக உள்ளது. 2 வது தபசில் சொத்து பொது தெரு என்பதால் மின் இணைப்பு வயர்களும் குடிநீர் இணைப்பு குழாய்களும் 2011, 2012ம் ஆண்டுக்கு முன்னரே பூமிக்கடியில் பதித்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னால் அப்படியில்லை, அப்போதே நாங்கள் ஆட்சேபணை செய்தோம். 2 வது தபசில் சொத்து வடக்கு பக்கம் குடியிருப்பு வீடுகளில் வெளியேறும் கழிவு நீரை கடத்துவதற்காக பலவருடங்களுக்கு முன்பே வருகால் கட்டப்பட்டு கழிவு நீர் கடத்தப்பட்டு வருகிறது என்று சொன்னால் அது தவறு. 09.07.2014 ல் விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் பதிவு செய்ய மேல்முறையீடு செய்ததாக கூறியுள்ளதில் அதன் மீது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா அல்லது நிலுவையில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நாங்கள்தாக்கல் செய்த வழக்கிற்கு உரிய வழக்குமூலம் இல்லாததால் தாவா வழக்கை தள்ளுபடி செய்யபடவேண்டும் என்று சொன்னால் அதுசரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.